புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# முப்பெரும்காப்பியங்களில் அரசாளுமை நெறிகள்

*ஆய்வாளர்*
*அ. அறிவுக்கொடி*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது),*
*திருவானைக்கோவில்,*
*திருச்சி - 620005, தமிழ்நாடு.*

*ஆய்வு சுருக்கம்:*

*சமுதாயத்தை நிர்வகித்து சட்டதிட்டங்களை உருவாக்கி மக்களை நல்வழியில் நடத்திச் செல்வதில் அரசின் ஆளுமைதிறன் முக்கியப்பங்கு வகிக்கின்றது. இலக்கியங்களும் அரசியல் மற்றும் பண்பாடு ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாட்டு முறைமைகளை எடுத்துக் கூறுகின்றன. நாட்டின் சமூக பொருளாதார நிலையை நாட்டில் உள்ள எளிய, நடுத்தர, உயர்தரப் பொருளாதார வசதியுடைய மக்களின் கண்ணோட்டத்தில் ஆளுமையை ஏற்று நடத்துவது அரசின் கடமையாகும். ஒருநாட்டின் அரசியல், பொருளாதாரம், தொழில் கலை போன்ற பலவற்றிற்கும் பொறுப்பு ஏற்று வழிகாட்டும் கடமை அரசிற்கு உண்டு. அதன்படி காப்பியக்கால ஆட்சியிலும் ஆளுமைநெறிகள், சிறப்புடன் அமைந்து உள்ளதைப் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக ஆராயலாம்.*

*முன்னுரை:*

*மக்களை நல்வழிப்படுத்தி, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மக்கள் நலமுடன் வாழ வகுக்கும் நெறிமுறைகளே ‘அரசியல்’ எனப்படும். அதனை நிர்வகிக்கும் பொறுப்பு நாட்டின் தலைவனாக உள்ள அரசனது கடமையாகும். நாட்டின் பாதுகாப்பு, வருவாய், சேமிப்பு, சேமித்தப் பொருளை மக்களுக்கு தக்க நேரத்தில் செலவிடுதல் இவையே அரசியல் பண்பாடாகவும், முக்கிய செயல்முறையாகவும் உள்ளது. இவற்றை அறிந்து ஆட்சிப்பொறுப்பை ஏற்று அறிவோடும், துணிவோடும் செயல்படும் திறமை நாடாளும் மன்னனுக்குத் தேவை. அந்த வகையில் சமுதாயத்தின் தலைவனாக விளங்கும் அரசனுக்கும், மக்களுக்கும் ஒழுங்கியல் மற்றும் பொருளாதார முறைகளை எடுத்துரைப்பதில் காப்பியங்கள்*

முக்கியப் பங்காற்றுகின்றன. இதன் அடிப்படையில் காப்பியங்களில் அரசின் ஆளுமைதிறன்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அரசின் கடமை:

நாட்டின் தலைவனாக உள்ளவன் ஆட்சி பொறுப்பை ஏற்று, நாட்டைப்பற்றியும், நாட்டின் மக்களைப் பற்றியும் அவர்களின் வளர்ச்சிப் பற்றியும் சிந்தித்து செயல்படுதல் வேண்டும். நீதிநெறிகளை அறிந்து, இயல்பான நுண்ணறிவோடு எந்த நேரத்திலும், மக்களுக்கு எத்துன்பம் நேர்ந்தாலும் அவற்றை நீக்கி மக்களைக் காக்கும் ஆற்றலுடைவனே அரசன். அரசனுக்குரிய நெறியிலிருந்து தவறாமல், நாட்டின் நலனுக்கு ஏற்ற வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதே அரசின் கடமையாகும். அரசன் மக்களுக்கு எளியோனாய், மக்களில் ஒருவனாய் இருந்து, மக்களின் துன்பத்தை நீக்க வேண்டும். நாட்டில் பசி, பிணி இன்றி மக்களைக்காப்பதும், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதும், நாட்டு மக்களின் நலனை தன் நலமாகக் கொண்டு செயல்படுவதே அரசின் கடமையாகும். இச்செய்தியினையே சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்,

மழைவளம் சுரப்பின் வான் பேரச்சம்
பிழை உயிர் எய்தின் பெரும் பேரச்சம்
குடிபுரவுண்டும், கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவில்

- காட்சி கா. வரி **- 100 - 104**

நாட்டில் மழைவளம் குறைந்தால் உணவு பொருட்கள் உற்பத்தி செய்ய முடியாது மக்கள் துன்பப்படுவர், மக்கள் பசி, பிணி போன்றவற்றால் பாதிக்கப்பட்டால், மக்களிடையே அறம் அழிந்து, குற்றச் செயல்களை செய்யும் நிலை ஏற்படும். இதனால் சமுதாய மாண்பு அழிந்துவிடும். இதனையே மணிமேகலையில்

குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்தகல்விப் பெரும்புனை ……………..
………………………………………….
பசிப்பிணி என்னும் பாவி
பாத். பெ.கா. வரி **76 - 80**

ஆகவே மக்களுக்கு எவ்வித துன்பமும் வராமலும், பசி எனும் நோய் நீக்கி, மக்களைக் காத்தல் மூலம் சமுதாயத்தை நல்வழிப்படுத்தல் அரசின் கடமை என உரையாசிரியர்கள் குறிப்பிடுவதைப் பாடலின் மூலம் அறியமுடிகின்றது.

ஆளுமையில் நீதிநெறி

குடிமக்களைப் பகைவரிடமிருந்து பாதுகாத்து அவர்களுக்கு நன்மை செய்வதே ஆளுமையின் சிறப்பாகும்.

தவறு நிகழும்பொழுது அந்தத் தவறைச் செய்தவன் யாராக இருந்தாலும் குற்றத்திற்குரியத் தண்டனையை வழங்க வேண்டும். குற்றம் செய்பவரை தண்டனையால் தண்டித்தும், மற்றவர்களை காத்தலும் நீதிநெறியாகும். நடுநிலை தவறாமல், குற்றங்களின் கடுமையை ஆராய்ந்து அற்குரியத்தண்டனையை வழங்குவதே அரசனின் நீதி நிலைப்பாடு ஆகும். இதனை இரட்டைக் காப்பியங்களில் அடிகளாரும், சாத்தனாரும் குறிப்பிடுவதை கீழ் உள்ள பாடல் வரிகள் மூலம் அறியலாம்,

"வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின்மடித்தோன்"

சிலம்பு. வழக்குரைகாதை அடி **53 - 55**

என்று சிலம்பிலும்

"மகனை முறை செய்த மன்னவன்"

ம.மே. சிறை செய்காதை அடி **-210**

என்று மேகலையிலும், மனுநீதிச் சோழன் தேரோட்டிச் சென்று பசுவின் கன்றைக் கொன்றமையால் அதனால் பாதிக்கப்பட்டத் தாய்ப்பசு நீதி கேட்டமையால், சோழ மன்னன பசு என்று பாராது குற்றத்தை ஆராய்ந்து அதற்குத் தண்டனையாகத் தன் மகனின் மீது தேர் ஏற்றுக்கொன்று, தானும், பசு ஏற்றத் துயரை ஏற்று நீதியை நிலைநாட்டினான். அரசாளுமையில் ஆட்சியில் நீதிநெறிவழுவாமல் நடுநிலை நீங்காமல் செயல்பட்டுள்ளனர் என்றும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து மக்களை வழிநடத்தி உள்ளனர் என்றும் காப்பியப் பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

ஆளுமையில் வீரம்:

கண்ணகியின் வரலாற்றை அறிந்த சேரன் செய்குட்டுவன் கண்ணகிக்கு விழாவெடுக்க ஆயுத்தமானான். இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்து, கங்கையில் நீர்எடுத்து நீர்படை செய்ய விரும்பி தனது பெரும்படையுடன் இமயம் நோக்கி சென்றான். இதனை அறிந்த ஆரிய மன்னர்கள் தமிழ் மன்னர்களை இகழ்ந்துபேசினர். இச்செய்தியை அறிந்த செங்குட்டுவன் அம்மன்னர்களோடு போரிட்டுவெல்லும் நோக்கத்தோடு வடதிசைச் சென்றான். இதனையே

காவா நாவின் கனகனும், விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடும் கூடி
அருந்தமிழ், ஆற்றல், அறிந்திலராய் ஆங்குஎனக்

கால்கோட் காதை - பா. அடி. **159 - 164**

என்றும்

கங்கைப்பே ரியாற்றுக் கன்னரிற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங்கு எய்தி;

கால்கோட் காதை - பா. அடி. **176 - 177**

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

*தமிழ் மன்னர்களின் வீரத்தை இகழ்ந்து பேசிய ஆரிய மன்னர்களை வென்று, தமிழ் அரசர்கள் ஆளுமையில் வீரமிக்கவர்கள் என்பதைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர். பின்னர் கனகவிசயன் தலைமையில் கண்ணகிக்கு கோயில் அமைத்து, கங்கையில் நீர்கொண்டு வந்து நீர்படைச் செய்தான் செங்குட்டுவன். இதன்மூலம் சேரன் செங்குட்டுவன் போர்களத்தில் மட்டுமல்லாது ஆளுமையில் வீரத்தோடும், அரசியலில் தந்திரத்தோடும் செயல்பட்டு பகை நாட்டினரையும் வென்று, கண்ணகி கோயிலையும் அமைத்து தனது வெற்றியை நிலைநாட்டினார். நாட்டின் தலைவருக்கு ஆளுமையில் துணிவும், அரசியலில் அறிவாற்றலும் தேவை என்பதை இளங்கோவடிகள் நமக்கு எடுத்துரைக்கிறார்.*

*அமைச்சர்கள் குழு:*

*எதனையும் நன்கு ஆராய்ந்து நாட்டின் நிர்வாகத்தில் ஏற்படும் சிக்கல்களை விவாதித்து, எந்த ஐயமும் இல்லாமல் திட்டங்களை செயல்படுத்துவதே அமைச்சியல் ஆகும். நாட்டிற்குத் தேவையான நல்லத் திட்டங்களை காலத்திற்கு ஏற்றபடி வகுத்து அவற்றை செயல்படுத்துவதற்கு ஆலோசனைக்குழுக்கள் அரசர்கள் காலத்தில் அமைக்கப்பட்டது. அதன் அடிப்படையில், ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற குழுக்கள் துணையாகச் செயல்பட்டது.*

*ஆட்சிபொறுப்பை ஏற்ற அரசன் தான் செய்யும் செயலின் நன்மை தீமை அறிந்து செயல்படவும், அவற்றைப்பற்றி ஆராய்ந்து அறிய, விவாதிக்க, ஐம்பெருங்குழுவில் அமைச்சர், சேனாபதியர், புரோகிதர், தூதுவர், சாரணர் ஆகிய ஐவர்களும் எண்பேராயக் குழுவில் தலைவர்களான நிர்வாகத்தலைவர்கள், நகர மக்கள், பொருள் காப்பாளர், காவல்காப்போர், கணக்கர்கள், தொழிலாளர் தலைவர்கள், படைத்தலைவர்கள், யானை வீரர்கள் ஆகிய எண்வகை குழுவினரும் அரசனோடு நேரடித் தொடர்பில் கல்வியறிவு பெற்றவர்களும், நல்லுள்ளம் படைத்த சான்றோர்களும, நீதி, நெறி தவறாத ஒழுக்கமுடையவர்களும், உண்மையை உடைய சான்றோரும் இக்குழுவில் மக்களுக்காகப் பணியாற்றினர். இதனை சிலம்பில்*

*"ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்*
*வெம்பரி யானை வேந்தர்க் கோங்கிய*
*கரும் வினைஞருங் கணக்கியல் வினைஞரும்*
*தரும் வினைஞரும் தந்திர வினைஞரும்*

*அரங். கா. அடி* ***126 - 129***

*என்று அடிகள் சித்தரிக்கிறார்.*

*மக்கள் தவறு செய்யும்பொழுது சிந்தித்து செயல்படுவதே ஆட்சியாளர்களின் கடமையாகும். நீதி தவறாமல் அரசர்கள் செயல்படவும் அவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் கற்றறிந்த சான்றோர்கள் நிரம்பிய அமைச்சர் குழுக்கள் அமைக்கப்பட்டது. இதனையே வள்ளுவர்,*

*தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாய்*

சொல்லலும் வல்லது அமைச்சு குறள் - **634**

என்று அமைச்சியலின் நெறியாக குறிப்பிடுகிறார்.

பாண்டியன் மன்னன் நீதிநெறி தவறி, அமைச்சர்களோடு ஆலோசிக்காமல் கொல்லன், கோவலனைக் கள்வன் எனக் கூறியது கேட்டு, ஆராய்ந்து அறியாமல், கோவலன் கொலைக்குக் காரணமாகி, அரசியலில் பிழை செய்கிறான். தான் செய்த குற்றம் அறிந்தவன் தான் அரசன் அல்ல, கள்வன் எனக்கூறி உயிர் நீத்துவிடுகின்றான். ஆகவே நீதி என்பது அனைவருக்கும் பொதுவானது. அது தவறும்பொழுது அதை காத்து, நீதியை, எடுத்துரைத்து அரசை வழி நடத்துவதே அமைச்சியலின் கடமையாகும்.

பொருளாதார நிலை:

நாட்டின் தலைவனுக்கு விரைவாகச் செயலலைச் செய்யும் திறனும், கற்றறிந்த அறிவும், செயல்படுத்தும் திறனும் வேண்டும். மக்களின் நிலைஅறிந்து பொருளாதாரத்தைப் பாதுகாத்தல் வேண்டும். நாட்டின் பொருள்வருவாய், அதற்கான வழிகளைத் திட்டமிடுதல் பொருளைச் சேமித்தல் போன்றவை அரசனின் கடமையாகும். நாட்டின் நிதித்தேவை அறிந்து அதற்கேற்றவாறு திட்டங்களை தீட்டி செயல்படுத்த வேண்டும். சமுதாய மக்களின் நிலைமைக்கேற்ப பொருளாதார அடிப்படையில் வரிவிதிக்கும்முறை அமைதல் வேண்டும். மக்களின் நிலையை முறையாக அறிந்து அவர்களுக்கு ஏற்றவாறு பொருளாதாரக் கொள்கைகள் அமைய வேண்டும். அவ்வாறு இல்லாமல் மக்கள் மீது நிதிகொள்கையை திணித்தால் மக்கள் துன்பப்பட நேரிடும். அரசன் பெருமை அழிந்து அவன் நிர்வாகம் அழியும். நிதிநிலைமை அழிந்தால், ஆட்சியே அழியும் நிலை உண்டாகும். பிறநாடுகளை எதற்கும் எதிர்பார்க்காது, நம் நாட்டில் உள்ள வளங்களை வைத்தே நாட்டை உயர்த்த வேண்டும். குடிமக்களின் நிலை அறியாமல் நிதிச்சுமையை வரி என்றும் பெயரில் மக்களிடம் திணிக்கும் பொழுது அரசன் ஆட்சியை இழந்து, பகை அரசனால் ஆட்சியானது கை கொள்ளப்படும். மக்கள் குற்றச்செயல் செய்ய தூண்டப்படுவர். ஒழுக்கம் அழிந்து ஆளுமை சீர்குலையும், இதனை

"கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
அறைபோகு குடிகளோடு ஒருதிறம் பற்றி.
…………………………..
புலம்பட இறுத்த விருந்தின் மன்னர்"

அந்திமாலை. கா. அடி **9 - 12**

எனக்குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள் தன் மன்னனோடு உட்பகையாக விளங்கிய குடிகள் பகை மன்னரோடு ஒருதலையாக தொடர்பு கொண்டு, அரசன் நாட்டில் இல்லாதபோது படையுடன் வந்து போரிட்டு நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளும் நிலை ஏற்படும். இதன்மூலம் நாட்டின் அரசன் தொழில் வளங்களை உருவாக்கி. இயற்கை வளங்களைக் காத்து அவற்றின் மூலம் நிதி நிர்வாகத்தை சிறப்புடன் செயல்படுத்த வேண்டும்.

பாதுகாப்பான ஆட்சிமுறை:

அரசர்கள் நாட்டையும், மக்களையும் பாதுகாக்க வேண்டும். நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் ஆபத்து ஏற்படும்போது அவற்றை எதிர்கொண்டு காக்கும் திறன் உடையவனாக இருத்தல் வேண்டும். ஆபத்து காலங்கள், இயற்கைபேரிடர் காலங்களில் தேவையான முன்னேற்பாடுகளை செய்து வைத்திருத்தல் வேண்டும். இத்தகைய பாதுகாப்பான ஆட்சிமுறையானது காப்பியகாலத்தில் மன்னர்களிடமும், மக்களிடையே முழுமையாக இருந்தது என்பதை சிலம்பில் இளங்கோவடிகள் தம்பாடலில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

போர்க்காலங்களில் பசு முதியோர் பெண்கள், நோய்வாய்ப்பட்டோர், ஆகியோரை பாதுகாத்தல் வேண்டும். இந்த நிலையை சிலம்பில் இளங்கோ அவர்கள்

"பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்,
தீத்தறத்தார் பக்கமே என சேர்க"

வ. மாலை. பா. அடி **53 - 55**

என்று போரிலு அறநெறி தவறாது, மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டதை அறியலாம்.

ஆட்சிதிறம்:

காப்பியக்காலத்தில் ஆட்சி அமைப்பதில் வாரிசு முடிசூட்டும் முறை நடைமுறையிலிருந்தது. அரசனுக்கு அடுத்து அவன் மூத்த மகன் ஆட்சி பொறுப்பேற்றனர். ஆட்சியல் உள்ள அலுவலர்கள், அமைச்சர்கள் அனைவரும் நேர்மையுடனும், அறநெறியும் இருத்தல் வேண்டும். நாட்டின் நன்மையையும், வளர்ச்சியையும், நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும். இத்தகைய ஆட்சிமுறைதான் சிறப்புற்று விளங்கும்.

அரசாங்கத் தொழிலாளரோடு, அரசன் கருத்து மாறுபட்டு மனம் போனவாறு செயல்புரிந்தால், அதனால் அரசியல் முறைமையினை இழந்து, பரந்த நாட்டினைப்போல, வேனிலாகிய அமைச்சரோடு, வேந்தனாகிய கதிரவன் மாறுபட்டு நிலம் அழிந்து பாலை போன்றாதாகிவிடும் நாடு இதனை,

"கோத்தொழிலாளரோடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியனிலம் போல வேனில் அம் கிழவனொடு..........
...............................
பாலை என்பதோர்

காடு காண் காதை **- 60 - 67**

என்கிறார் இளங்கோவடிகள்.

வருவாய்க்கு ஏற்ப சமுதாய நலத்திட்டங்களை செயல்படுத்த வேண்டும். அவ்வாறு செயல்படவில்லையெனில் ஆட்சி பொருளாதாரத்தில் சீர்கேடு ஏற்படும். இதனையே வள்ளுவரும்

இயற்றலும் ஈத்தலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு

குறள் - 385

பொருள் வருவாய்க்கான வழிவகுத்தல் அதன்படி பொருளைப் பயன்படுத்தலும் அரசின் ஆட்சி திறமையை வெளிப்படுத்துகிறது.

அரசாளுமையில் பிழை:-

குடிமக்களைக் காத்தலும், அரச நெறியிலிருந்து தவறாமல் மக்களின் நலனையும் கருத்தாகக் கொண்டு செயல்படும் ஆட்சி முறையே சிறப்பான, செங்கோன்மை ஆட்சி முறையாகும். அவ்வாறு அல்லாமல் அரசன் நீதிநெறி தவறி ஆட்சி செய்பவருக்கு அறமே கூற்றாகும் என்பது இளங்கோவடிகளின் சிலப்பதிகார பாடல் வரிகளில் குறிப்பிட்டுள்ளார். அரசியல் ஆளுமையில் அரசநெறி தவறி, நெறியல்லாத செயலை செய்ய நேரிடும்போது ஆளுமையில் பிழை ஏற்படுகிறது. பண்பில்லாத செயல்களைச் செய்பவனின் ஒழுக்கம் நெறி தவறி சென்றால் அது அவனுக்கே கேடாக அமையும். முறையாக ஆராய்ந்து அறியாமல் செயல்திறன் இல்லாத அமைச்சர், மக்கள் நலனைக் கருத்தில் கொள்ளாது தன்னலமே பெரிது எனக் கருதி, முடிவில்லாத குற்றமான செயல்களை செய்யும் நிர்வாகமும் ஆட்சியை இழக்க நேரிடும் இதனையே,

அசைவிலாப் புறவி வெள்ளத்
தரிஞ்சயன் குலத்துட்டோன்றி
வசையிலா வரத்தின் வரத்தாள்
வான்சுவை அமிர்த மன்னாள்
……………………………
வேந்தனாகி வைய
மிசைபடக்காத்தல் வேண்டும்

சீவக சிந்தாமணி பா.எ.201

எனத் திருத்தக்கத்தேவர் சீவக சிந்தாமணி பாடலில், சீவகனின் தந்தை சச்சந்தன் மனைவியிடம் கொண்ட பேரன்பால் ஆட்சி பொறுப்பை அமைச்சரிடம் (கட்டியங்காரனிடம்) ஒப்படைத்ததன் விளைவாக அமைச்சன் மன்னனை அழித்து, நாட்டைப் பறித்துக் கொள்கிறான்.

எனவே ஆட்சிபொறுப்பை ஏற்று நடத்தும் ஆட்சியாளர்கள் குடிகளைக் காத்தல், சமுதாய முன்னேற்றத்திற்கு உழைத்தல், நடுவுநிலை தவறாதிருத்தல், எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகுத்தல், குற்றங்களை களைதல் போன்றவற்றினையே கருத்திலும் செயலில் திண்ணியமாகக் கொண்டு செயல்படவேண்டும். அவ்வாறு செயல்படும்போது ஆட்சியானது சிறப்புடன் நிலைபெற்று நீடித்து நிற்கும். அரசின் ஆளுமையில் நிர்வாகப் பொறுப்பினை ஏற்கும் அனைவரும் தங்களது பொறுப்பினை உணர்ந்து திறம்பட தங்களது பணியினை மேற்கொள்ள வேண்டும் இதனையே வள்ளுவர்,

படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண்ஆறம்
உடையான் அரசருள் ஏறு

*குறள் - 381*

*திறமிக்க படை, நல்லகுடிமக்கள், செழிப்பான விளைபொருள், அறிவார்ந்த அமைச்சர்கள் பாசமுள்ள நண்பர்கள், வலுவான அரண் அமைப்பு ஆகிய ஆறும் சிறப்பாகப்பெற்ற மன்னன் அரசருள் சிங்கம் (ஏறு) போன்றவன் ஆவான். அவனுடைய ஆட்சியில் அரசாளுமை செழித்து, நாடும் நாட்டுமக்களும் செழிப்புடன் குற்றமின்றி இன்புற்று வாழ்வர் என்பதை ஆசிரியர் நமக்குப் புலப்படுத்துகிறார்.*

*முடிவுரை:*

*தமிழ் இலக்கியங்களில் தமிழர்களின் பண்பாட்டை எடுத்துக்கூறாத நூல்களே இல்லை எனலாம். இலக்கியங்களில் அரசியலும், ஆளுமைத்திறனும், பண்பாட்டு நிலைகளில் ஒன்றாகவே திகழ்கிறது. நாட்டின் தலைவன் அல்லும் பகலும், பசியறியாது, உறக்கம் கொள்ளாது, உறவறியாமல், உடல்பிணியறியாமல் சமுதாய முன்னேற்றம் ஒன்றையும் சீர்மையோடு கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அரசன் எப்பொழுதும் வெற்றியுடன் வாழவேண்டும், குடிமக்களின் குறைகளை நீக்குவதே அரசின் ஆளுமைப் பண்பாகும். நிதி, நீதி, ஆட்சிமுறை, பாதுகாப்பு, குற்றங்கடிதல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் அரசாட்சியில் நல்லறங்கள் சிறந்து விளங்கும். இதன்மூலம் காப்பிய கால ஆட்சிமுறையில் அரசின் ஆளுமை செழித்து மக்கள் சிறப்புடன் வாழ்ந்தனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.*

*பார்வை நூல்கள்:*

*1. சிலப்பதிகாரம் - புலியூர் கேசிகன்உரை*
*2. மணிமேகலை - புலியூர் கேசிகன்உரை*
*3. சீவகசிந்தாமணி மூலமும் உரையும் - கௌரா பதிப்பகம்*
*4. திருக்குறள்*